[1973 மார்ச் 10

முறை இருக்கிறது. கோஷா பிரிவில்தான் அப்படி இருக்கிறது. மற்றவர்களுக்கு அப்படிக் கட்டாயம் இல்லை. ஆனால் பொதுவாக மகப்பேறு துறையில் பெண்கள் ஏராளமானவர்கள் பயிற்சி பெற்றவர்களாக இருக்கிறார்கள்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, கோஷா ஆஸ்பிட்டலுக்குத்தான் அந்த முறை என்று கூறினார்கள். பிரசவ ஆஸ்பத்திரியாக இருக்கிற காரணத்தால், பெண் டாக்டர்களே பார்க்கவேண்டும், ஆண் டாக்டர்கள் பார்க்கக் கூடாது என்ற முறையிலே, அதிகமான பெண் டாக்டர்களை, நிபுணர்களை நியமிக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மருத்துவத்திலும், ஆபத்திலும் இந்த இனப் பாகுபாடு பார்ப்பதில்லை. அப்படிப் பார்ப்பதே கோஷா மனப்பான்மை. அது திரு. வகாப் அவர்களுக்கு ஏற்படக் கூடாது.

*315 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை எழும்பூரில் உள்ள பெண்கள் பிரசவ ஆஸ்பத்திரியில் உள்ள லிப்ட் நல்ல முறையில் வேலை செய்கிறதா ?

(இ) இல்லையெனில், அதற்கு வேறு லிப்ட் பொருத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) தற்சமயம் டி.சி. (D.C) மின்னோட்டத்திலியங்கும் லிப்டிற்குப் பதிலாக நடப்பாண்டில் ஏ.சி. (A C) மின்னோட்டத்திலியங்கும் ஒரு புதிய லிப்ட் பொருத்துவதற்காக ரூ. 90,000 ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, ஒப்புக்கொள்ளப்பட்டு சில காலம் ஆகியும் இன்னும், பிரசவம் நடக்கின்ற அந்த மருத்துவமனையிலே லிப்ட் எவ்வளவு முக்கியமானது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நாமும் உணர்வோம், ஆகவே, இந்த லிப்டை உடனடியாக அமைப்பதற்கும்—'ராம்ப்' என்ற வசதியை, அதைக் கட்டித் தரும்படியாகக் கேட்டிருக்கிறார்கள் என்று அறிகிறேன்—அதையும் கட்டித் தந்தால், மற்ற ஆஸ்பத்திரிகளோடு இந்தப் பிரசவ ஆஸ்பத்திரிக்கும் மிக வசதியாக இருக்கும். அதைச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டு, இப்பொழுது 3 திங்கள்கூட ஆகவில்லை, ஏனென்றால், டிசம்பர் திங்களிலே, ஏ.சி. லிப்ட் அமைக்கப்பட வேண்டுமென்று, 15—12—1972-ல்தான்,

ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆகவே, விரைவிலே லிப்ட் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மற்ற ஆலோசனைகளும் பரிசீலிக்கப்படும் முடிந்தால் ஏற்றுக்கொள்ளப்படும். ஆனால், பிரசவத்திலே அக்கறை இருக்கிறவர்கள் குடும்பக் கட்டுப்பாட்டிலும் கொஞ்சம் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும், அதுபற்றியும் கேள்வியாவது கேட்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செஞ்சி ஆரம்ப சுகாதார நிலையம்

* 316 வினா.—திரு. ரா. ரா. முனுசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி ஊராட்சி ஒன்றிய ஆரம்ப சுகாதார நிலையத்தில் படுக்கை வசதியை விரிவுபடுத்தும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இக் கேள்வி எழவில்லை.

மதுரை மருத்துவக் கல்லூரியில் பணியாற்றும் வல்லுநர்கள்

* 317 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை அரசாங்க மருத்துவ மனைக் கல்லூரியில் ஓய்வு பெற்ற பின்பு, பதவி நீட்டிப்பு கொடுக்கப்பட்டுள்ள டாக்டர்கள் எவரேனும் உள்ளார்களா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) கீழ்க்கண்ட இரண்டு மருத்துவ வல்லுநர்கள் ஓய்வு (Retirement) பெற்றபின் மறுபடியும் வேலையில் (Re-employment) நீடிக்கப் பட்டுள்ளார்கள்.

(1) டாக்டர் எஸ். ஏ. கபீர், டீன், மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை.

(2) டாக்டர் ஏ. ஏ. ஆசிர்வாதம், அறுவை சிகிச்சை இயல் பேராசிரியர், மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS